**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: MC.17/2025**

**Prosecution Witnesses : 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : **சந்தியா** | Caste | : |
| Father 's Name / Husband Name | : **அரவிந்த்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(மனுதாரர் ஆஜர். எதிர்மனுதாரர் ஆஜர் இல்லை. மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)

**(16.04.2026)**

**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். என்னுடைய வழக்கினை நிரூபணம் செய்ய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள அனைத்து சங்கதிகளும் எனக்குத் தெரியும். எனக்கும் எதிர்மனுதாரருக்கும் நடைபெற்ற திருமணத்திற்கான திருமண அழைப்பிதழ் அசல் ம.சா.ஆ.1 ஆகவும், திருமணத்தின் போது எடுக்கப்பட்ட திருமண புகைப்படம் அசல் ம.சா.ஆ.2 ஆகவும், 1ம் மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை அசலுடன் சரிபார்க்கப்பட்டு நகல் ம.சா.ஆ.3 ஆகவும், திருத்தங்கல் காவல் நிலையத்தில் 1ம் மனுதாரர் தாக்கல் செய்த புகார் மனுவுக்கான புகார் மனு ரசீது நகல் அசலுடன் சரிபார்க்கப்பட்டு ம.சா.ஆ. 4 ஆகவும், திருமங்கலம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் 1ம் மனுதாரர் தாக்கல் செய்த புகார் மனுவுக்கான புகார் மனு ரசீது நகல் அசலுடன் சரிபார்க்கப்பட்டு ம.சா.ஆ,5 ஆகவும், 2ம் மனுதாரரின் பெயரில் ஆதார் அடையாள அட்டை நகல் அசலுடன் சரிபார்க்கப்பட்டு ம.சா.ஆ. 6 ஆகவும், 2ம் மனுதாரரின் பிறப்பு

சான்றிதழ் நகல் அசலுடன் சரிபார்க்கப்பட்டு ம.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இனங்க முதல் விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.